**உயர்கல்வி வழிகாட்டல் குழு உறுப்பினர்களின் பொறுப்புகள் :**

1. **தலைமையாசிரியர் / உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்:**

1.a ) 12 ஆம் வகுப்பு தேர்வெழுதிய மற்றும் தேர்வு எழுதாத மாணவர்களுக்கு பள்ளிகளில் உள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகம் வாயிலாக (Hi- Tech Lab) "உயர்கல்வியை அறிவோம்" (இணைப்பில் உள்ளவாறு) காணொளி நிகழ்வு 03.04.2024 முதல் 15.05.2024 வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் பல்வேறு உயர் கல்விகள் மற்றும் அதில் சேருவதற்கான வழிமுறைகள் / தகவல்கள் குறித்து அந்தந்த துறைகள் சார்ந்த வல்லுநர்களை கொண்டு நேரடி மற்றும் பதிவு செய்யப்பட்ட காணொளிகள் வடிவில் மாணவர்களிடம் ஒளிபரப்பப்படுகிறது. இந்த நிகழ்வில் பங்கு பெறும் மாணவர்களின் வருகைப் பதிவை உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் வாயிலாக EMIS இணைய தளத்தில் பதிவு செய்வதை தலைமையாசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும் .

1.b) தலைமையாசிரியர்கள் /உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் அனைவரும் உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களை தொடர்பு கொண்டு, பள்ளி அளவிலான திட்டமிடல் / கலந்துரையாடல் கூட்டத்தை வருகின்ற 24-04-2024 அன்று நடத்தி, உயர்கல்விக்கான விண்ணப்பத்தை மாணவர்கள் பூர்த்தி செய்வதற்கு தேவையான சான்றிதழ்கள், ஆவணங்கள், மாணவர்களின் உயர்கல்விக்கு தடையாக இருக்கும் காரணங்கள் மற்றும் சவால்களை கண்டறிந்து ஆவணப்படுத்த வேண்டும், அந்த ஆவணத்தை EMIS இணைய தளத்தில் உள்ள படிவத்தில் பதிவேற்றம் செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். .அனைத்து மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை பள்ளி அளவிலான உயர்கல்வி வழிகாட்டி குழு உறுதி செய்ய வேண்டும். உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களின் பொறுப்புகள் என்னவென்பதை **இணைப்பு 3** ல் குறிப்பிட்டுள்ளவாறு தெரிவுப்படுத்த வேண்டும். அதனை தொடர்ந்து அவர்களுக்கு தேவையானத் துணை ஆவணங்களும் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளது. கூட்டம் முடிந்த பின், கூட்டத்தில் கலந்து கொண்டஉயர்கல்வி வழிகாட்டி உறுப்பினர்களின் (CG Cell) வருகைப் பட்டியலினை EMIS இணைய தளத்தில் பதிவு செய்வது முக்கிய செயல்பாடாகும்.

1.c) **வருகின்ற மே மாதம் 3ஆம் தேதி நடைபெறவிருக்கின்ற** பள்ளி மேலாண்மை குழு (SMC) கூட்டத்தில் உயர்கல்வி வழிகாட்டி குறித்து நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள் மற்றும் கலந்துரையாடல்களை தொடர்ந்து இந்த முறையும் மாணவர்களின் உயர்கல்வி சார்ந்தவற்றை பேசு பொருளாக்கி (பெற்றோர்களின் மத்தியில் உயர்கல்வி தொடர்பான தகவல்களை கொண்டு சேர்த்திட வேண்டும்) நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அனைத்து அரசு பள்ளி மாணவர்களும் உயர்கல்வியில் சேர்க்கை பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

Scanned with OKEN Scanner

1.d) 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியாகும் மே 6 நிலையில் உயர்கல்வி வழிகாட்டி குழு முகாம் மே 6 ம் தேதி முதல் அவசியம் நடத்த வேண்டும் , அனைத்து 12ஆம் வகுப்பு தேர்வெழுதிய, தேர்வெழுதாத மற்றும் தேர்ச்சி பெற்ற மாணவர்களை பள்ளிக்கு உயர்கல்வி வழிகாட்டி குழு வாயிலாக வரவழைத்து, உயர்கல்விக்கு மற்றும் துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 10ஆம் வகுப்பு மற்றும் 11 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வந்தவுடன், மே 10ம் தேதி முதல் அம்மாணவர்களையும் முகாமிற்கு வரவழைத்து தேர்ச்சி பெறாத மற்றும் தேர்வு எழுதாத மாணவர்கள் துணைத் தேர்வுக்கும் , 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களை 11 ஆம் வகுப்புக்கு விண்ணப்பிக்க வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாணவர்களின் விவரங்களை EMIS இணையதளத்தில் **இணைப்பு 6** ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு பூர்த்தி செய்ய வேண்டும்.

1.e ) ஜூன் மற்றும் ஜூலை ஆகிய மாதங்களில் நடைபெறும் 12 ஆம் வகுப்பு துணைத்தேர்வில் தேர்ச்சி பெற்று கல்லூரிக்கு விண்ணப்பிக்காத மாணவர்களை உயர்கல்வி தொடர்வதற்கு வழிகாட்ட வேண்டும். இதனை தொடர்ந்து 12 ஆம் வகுப்பு துணைத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களையும் கவனத்தில் எடுத்து கொண்டு அவர்களின் தேவைகள் மற்றும் சவால்களை கண்டறிந்து EMIS இணையதள பக்கத்தில் பதிவுசெய்தோடு அவை அனைத்தையும் சரிசெய்வதற்கு சார்ந்த துறைகளுக்கு தெரியபடுத்தி நடவடிக்கை எடுக்கப்படும்

2. **பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள்:**

2.a) பள்ளியளவில் நடைபெற கூடிய திட்டமிடல் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழு தலைவர்/ துணைத் தலைவர் கலந்து கொண்டு உயர்கல்வி வழிகாட்டி குழுவில் தங்களது பொறுப்புகள் மற்றும் பங்களிப்புகள் என்னவென்பதை தலைமை ஆசிரியரின் மூலம் அறிந்து கொண்டு செயல்பட வேண்டி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ( **இணைப்பு 3** ல் உள்ளவாறு)

2.b) பள்ளிகளில் 6 ஆம் தேதி முதல் நடக்க இருக்கும் உயர்கல்வி வழிகாட்டி முகாமிற்கு வராத 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் விவரங்களை தலைமையாசிரியர்கள் வாயிலாக பெற்று இல்ல நேர்காணலின் வாயிலாக மாணவர்களை பள்ளிக்கு வரவழைத்து பயனடையச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த இல்ல நேர்காணலின் போது, "உயர்கல்வியை அறியலாம்" என்ற நிகழ்ச்சியின் வாயிலாக பல்வேறு உயர் கல்விகள் குறித்தும் மற்றும் அதில் சேருவதற்கான வழிமுறைகள் குறித்து அந்தந்த துறைகள் சார்ந்த வல்லுநர்களை கொண்டு நேரடி மற்றும் பதிவு செய்யப்பட்ட காணொளிகள் வடிவில் மாணவர்களிடம் ஒளிபரப்பப்படுகிறது. எனவே, இதன் முக்கியத்துவத்தை மாணவர்களின் பெற்றோர்களுக்கு எடுத்துரைத்து மாணவர்களை இந்த நிகழ்வில் கலந்துகொள்ள

Scanned with OKEN Scanner

ஊக்கமளிக்க வேண்டும். SMC உறுப்பினர்கள் தாங்கள் பயன் பெறச்செய்யும் மாணவர்களின் விவரங்களையும், பயன் பெற இயலாத மாணவர்களின் காரணங்களையும் parents app ல் . மாணவர்களின் விவரங்களை **இணைப்பு 7** ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2.c) உயர்கல்விக்கு தேவைப்படும் சான்றிதழ்கள் இல்லாத மாணவர்களின் பட்டியலை தலைமையாசிரியரிகளிடம் இருந்து பெற்றுக் கொண்டு அம்மாணவர்களுக்கு பள்ளிக்கு அருகாமையில் உள்ள இ - சேவை மையத்தில்வாயிலாக விண்ணப்பித்த உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தாங்கள் பயன் பெறச்செய்யும் மாணவர்களின் விவரங்களையும் பயன்பெற இயலாத மாணவர்களின் காரணங்களையும் parents app ல் பதிவிடுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

2.d) ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் 12 ஆம் வகுப்பு துணைத்தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்விக்கு விண்ணப்பிக்காத மாணவர்கள், 12 ஆம் வகுப்பு துணைத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களின் விவரங்களை தலைமையாசிரியரிகளிடமிருந்து பெற்று இல்ல நேர்காணலின் மூலம் அவர்களுக்கு ஏற்படும் சவால்கள் மற்றும் உயர்கல்வி அடைய தேவைப்படும் உதவிகள் என்னவென்பதை கண்டறிந்து தகவல்களை parent app ல் பதிவு செய்வது, சார்ந்த துறைகளுக்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வழிவகுக்கும்.

2.e) உயர்கல்வி சேர்க்கைக்காக எதிர்நோக்கி காத்துகொண்டிருக்கும் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு சிறந்த முறையில் வழிகாட்டிட பல தகவல்கள் தேவைப்படும் எனவே அவற்றை புரிந்துகொள்வதற்கு ஒரு நாள் பயிற்சி மாவட்ட அளவில் மாவட்டத்தில் வருகிற ஏப்ரல் 25 ஆம் தேதி முதல் மே 4 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் தவறாமல் கலந்து கொள்வது மிக அவசியம்.

3. **அரசு பள்ளிகளில் படித்த முன்னாள் மாணவர்கள்:**

3.a) கணினி திறன் தெரிந்த, ஆர்வமுள்ள முன்னாள் மாணவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பள்ளிகளுக்கு சென்று உயர் தொழில்நுட்ப (Hi tech Lab) ஆய்வகத்தின் வாயிலாக மாணவர்கள் அனைவரையும் "உயர்கல்வியை அறியலாம்" காணொளிகளை ஒளிபரப்பு செய்து மாணவர்களை பார்க்க வைப்பதற்கு ஏதுவாக உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு தேவைப்படும் உதவிகளை செய்து உறுதுணையாக இருக்க வேண்டும். இதன் காரணமாக மாணவர்கள் உயர்கல்வி பற்றி அறிந்து கொள்ளவும், விண்ணப்பிக்கவும் பயனுள்ளதாக அமையும்.

Scanned with OKEN Scanner

பள்ளி அளவில் நடைபெற கூடிய திட்டமிடல் கூட்டத்தில் அரசு பள்ளிகளில் படித்த முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டு உயர்கல்வி வழிகாட்டி குழுவில் தங்களது பொறுப்புகள் மற்றும் பங்களிப்புகள் என்னவென்பதை தலைமையாசிரியர்களின் வாயிலாக அறிந்து கொண்டு செயல்பட வேண்டி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ( **இணைப்பு** 3 ல் உள்ளவாறு)

3.b) உயர்கல்வி சேர்க்கைக்காக எதிர்நோக்கி காத்துகொண்டிருக்கும் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு சிறந்த முறையில் வழிகாட்டிட பல தகவல்கள் தேவைப்படும் எனவே அவற்றை புரிந்துகொள்வதற்கு ஒரு நாள் பயிற்சி மாவட்ட அளவில் மாவட்டத்தில் வருகிற ஏப்ரல் 25 ஆம் தேதி முதல் மே 4 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் தவறாமல் கலந்து கொள்வது மிக அவசியம்.

3.c) பள்ளிகளில் 6 ஆம் தேதி முதல் நடக்க இருக்கும் உயர்கல்வி வழிகாட்டி முகாமிற்கு வராத 10ஆம் வகுப்பு மாணவர்களின் விவரங்களை தலைமை ஆசிரியரிடம் இருந்து பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் இணைந்து இல்ல நேர்காணலின் மூலம் பள்ளிக்கு வரவழைத்து பயனடையச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தாங்கள் பயன் பெறச் செய்யும் மாணவர்களின் விவரங்களையும் பயன் பெற செய்ய இயலாத மாணவர்களின் காரணங்களையும் parents app / EMIS இணைய தளத்தில் . மாணவர்களின் விவரங்களை **இணைப்பு** 8 ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3.d) ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் 12ஆம் வகுப்பு துணைத்தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்விக்கு விண்ணப்பிக்காத, 12ஆம் வகுப்பு துணைத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களின் விவரங்களை தலைமையாசிரியர்களிடம் இருந்து பெற்று இல்ல நேர்காணலின் மூலம் அவர்களுக்கு ஏற்படும் சவால்கள் மற்றும் உயர்கல்வி அடைய தேவைப்படும் உதவிகள் என்னவென்பதை கண்டறிந்து தகவல்களை parents app / EMIS இணைய தளத்தில் பதிவுசெய்வது, சார்ந்த துறைகளுக்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வழிவகுக்கும்.

## 4. .நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள்:

4.a) நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் தங்களுக்கு என்று பள்ளியில் ஒதுக்கப்பட்டுள்ள 12ஆம் வகுப்பு மாணவர்களை தொடர்புகொண்டு பள்ளிகளில் நடைபெறும் "உயர்கல்வியை அறியலாம்" நிகழ்ச்சி பற்றிய தகவல்களையும் அந்த நிகழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறி நேரலை நிகழ்வில் கலந்துகொள்ள செய்வதே தங்களின் முக்கியப்பங்காகும்.

4.b) பள்ளி அளவில் நடைபெற கூடிய திட்டமிடல் கூட்டத்தில் கலந்து கொண்டு உயர்கல்வி வழிகாட்டி குழுவில் தங்களது பொறுப்புகள் மற்றும் பங்களிப்புகள் என்னவென்பதை

Scanned with OKEN Scanner

தலைமை ஆசிரியரின் மூலம் அறிந்து கொண்டு செயல்பட வேண்டி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். ( **இணைப்பு** 3 ல் உள்ளவாறு)

4.c) உயர்கல்வி சேர்க்கைக்காக எதிர்நோக்கி காத்துகொண்டிருக்கும் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு சிறந்த முறையில் வழிகாட்டிட பல தகவல்கள் தேவைப்படும், எனவே அவற்றை புரிந்துகொள்வதற்கு ஒரு நாள் பயிற்சி மாவட்ட அளவில், அந்தந்த மாவட்டங்களில் வருகிற ஏப்ரல் 25 ஆம் தேதி முதல் மே 4 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்த பயிற்சியில் தவறாமல் கலந்து கொள்வது மிக அவசியம்.

4.d) தாங்கள் பதிவு செய்த பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அனைவரும் உயர் கல்விக்கு விண்ணப்பிக்க தகுந்த உதவிகள் செய்தல், சார்ந்த பள்ளிகளில் தேர்ச்சி பெறாத/ தேர்வு எழுதும் மாணவர்களை ஊக்கப்படுத்தி துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்க தகுந்த உதவிகள் செய்தல். தாங்கள் பயன் பெறச் செய்யும் மாணவர்களின் விவரங்களையும் பயன் பெற செய்ய இயலாத மாணவர்களின் காரணங்களையும் parents app / EMIS இணைய தளத்தில் மாணவர்களின் விவரங்களை **இணைப்பு** 9 ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மாநில மற்றும் மாவட்ட அளவிலான பயிற்சி:**

அரசு பள்ளி மாணவர்களின் உயர்கல்வியில், உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் மாணவர்கள் உயர்கல்விக்கு செல்லத்தடையாக இருக்கும் காரணங்களை கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுத்து அனைத்து மாணவர்களும் உயர்கல்விக்கு செல்வதற்கு ஒரு பாலமாக இருக்க, அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் உள்ள அனைத்து உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் தொடர் பயிற்சி தேவைப்படுகிறது அதற்காக வருகின்ற ஏப்ரல் 29, 30 ஆகிய தேதிகளில், 190 மாவட்ட கருத்தாளர்களுக்கு மாநில உயர்கல்வி வழிகாட்டி குழுவால் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, பயிற்சிப் பெற்ற மாவட்ட கருத்தாளர்கள், 40,599 உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கு (பள்ளி உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களின் விவரங்களை அந்தந்த பள்ளி EMIS இணைய தளத்தில் உள்ள login ல் எடுத்துக் கொள்ளலாம் மற்றும் அப்பெயர் பட்டியல்கள் அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது) மே 2 முதல் 10 வரை மாவட்ட அளவில் பயிற்சி அளிப்பார்கள் (பயிற்சி விவரங்கள் **இணைப்பு 4**)

Scanned with OKEN Scanner

**மாநில மற்றும் மாவட்ட அளவிலான பயிற்சிக்கான மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் பொறுப்புகள்:**

1. **இணைப்பு-5** ல் உள்ள தெரிவு செய்யப்பட்டுள்ள பங்கேற்பாளர்களுக்கு தகவல் மற்றும் தகுந்த அனுமதிகள் வழங்கி, வருகின்ற ஏப்ரல் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் மாநில அளவில் (இடம் - Mother Teresa women's University Kodaikanal) நடைபெற இருக்கும் பயிற்சிக்கு உரிய நேரத்தில் பங்கேற்பதை உறுதி செய்திட கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்
2. மாநில அளவிலான பயிற்சியில் ஒரு மாவட்டத்திற்கு 5 நபர்கள் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (CG-DCs)-1, ஆசிரியர் பயிற்றுநர் (CG-BRTs)-1, மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன பயிற்றுநர்கள் (DIET Faculties) -2 மற்றும் மாவட்ட நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர் (NSS Programme Nodal Officer)-1 ) பங்கெடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3. அதன் தொடர்ச்சியாக மே 2ஆம் தேதி முதல் மே 10ம் தேதி வரை மாவட்ட அளவில் நடைபெறவுள்ள மாவட்ட பயிற்ச்சிக்கு, மாநில அளவிலான பயிற்சி பெற்ற பங்கேற்பாளர்கள் தொடர்ந்து கருத் தாளர்களாகப் செயல்படத் தகுந்த அனுமதி வழங்கி பயிற்சிகள் சிறப்பாக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
4. மேலும் மாவட்ட அளவில் நடைபெற இருக்கும் பயிற்சியில் பங்கேற்கும் உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள் வருகைப் பதிவை உயர்கல்வி - மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் EMIS இணையதளத்தில் **இணைப்பு 10** ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு பூர்த்தி செய்யுமாறு கேட்டு கொள்ளப் படுகிறார்கள்.
5. மாவட்ட அளவிலான பயிற்சி களுக்கு தகுந்த காற்றோட்டமான, குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் மற்றும் போதிய இருக்கைகளுடன் கூடிய பயிற்சி அரங்குகளை ஏற்பாடு செய்ய வேண்டும். பங்கேற்பாளர்கள் மற்றும் கருத்தாளர்களுக்கு மதிய உணவு மற்றும் தேநீர் ஏற்பாடு செய்ய வேண்டும்.
6. மாவட்ட அளவில் நடைபெறக் கூடிய பயிற்சிகள் தொடர்பான செலவினங்களுக்கான தொகை மாவட்ட வங்கிக் கணக்கிற்கு மாநில திட்ட இயக்குனரகத்தில் இருந்து அனுப்பப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உயர்கல்வி வழிகாட்டி குழுக்கான செயல்பாட்டு வழிமுறைகள், குழு உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் அவர்களுக்கான பயிற்சிகள் தொடர்பானவழிகாட்டுதல்களை அனைத்து மாவட்டங்களிலும் முதன்மை கல்வி அலுவலர்கள் வாயிலாக சிறப்பாக நடைப்பெறுவதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.

Scanned with OKEN Scanner

**Annexures (QR Codes)**

| Annexure | Details | QR Codes |
|---|---|---|
| 1 | அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டல் குழு அமைத்தல் செயல்முறைகள் (**dated** : 27.04.2023) | |
| 2 | AY 2022-23 UMIS-EMIS Reconciliation Report Heat Map | |
| 2 | UMIS - Higher Education Status Data of AY 2022-23 as on 08th April 2024 & AY22 23 Enrolment Status 08 April 24, | |
| 3 | Toolkit for CEO, DC, KRP-DIET, BRTE-CG and Career Guidance Cell members | |

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| 4 | மாநில மற்றும் மாவட்ட அளவிலான பயிற்சி விவரங்கள் | |
| 5 | DIET-KRPs and DCs list | |
| 5 | NSS Nodal POs participants list | |
| 6 | HM's / Teacher Counsellor's Survey Template | |
| 7 | SMCs House Visit Template | |
| | | |

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| 8 | Alumni House Visit Template | |
| 9 | NSS Volunteers Survey Template | |
| 10 | Training Attendance of Career Guidance Cell Members | |

Scanned with OKEN Scanner

கூடுதல் QR Codes : -

| Annexure | Details | QR Codes |
| --- | --- | --- |
| 1 | District Wise - Institutions & Course List | |
| 2 | Stream-wise Application Dates (Tentative) - 2024 - 25 | |
| 3 | FAQs on Education Loan | |
| 4 | FAQ on Scholarships | |

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| 5 | 7.5 % FAQs | |
| 6 | Pudhumai Pen Scheme FAQs | |

Scanned with OKEN Scanner

**தமிழ் நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் மாநிலத் திட்ட இயக்குநரின்**

**இணைச் செயல்முறைகள், சென்னை - 06**

**ந.க.எண் 1416/ஆ3/நா.மு/ஒ.ப.க/2023 நாள்: 27.04.2023.**

**பொருள்:** நான் முதல்வன் திட்டம் 2023-24 – அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டல் குழு அமைத்தல் (Career Guidance Cell) - வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து

**பார்வை:**
1. மாநில அளவில் நடைபெற்ற கல்லூரிக் கனவு மாநிலக் கருத்தாளர்களுக்கான பயிற்சி 18.04.2023 மற்றும் 19.04.2023
2. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண் 1416/ஆ3/நா.மு/ஒ.ப.க/2023 நாள் 20.04.2023

*******

**'நான் முதல்வன்"** திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அமைக்கப்படவிருக்கும் பள்ளி அளவிலான உயர்கல்வி வழிகாட்டல் / ஆலோசனைக் குழு (Career Guidance Cell) வருகின்ற **06.05.2023 முதல்** செயல்படவுள்ளது.

**பள்ளி அளவிலான உயர்கல்வி வழிகாட்டல் குழு என்பது என்ன ?**

அரசுப் பள்ளி மாணவர்கள் 12ஆம் வகுப்பு முடித்த நிலையில் அவர்களுடைய மனதில் உயர்கல்வி தொடர்பாக பல கேள்விகள்/சந்தேகங்கள் எழும். இதற்கு, **பள்ளி அளவிலான உயர்கல்வி வழிகாட்டல் குழு** வாயிலாக அந்தந்த பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதிய /எழுதாத, இடைநின்ற மற்றும் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற/பெறாத மாணவர்களுக்கு தகுந்த உயர்கல்வி ஆலோசனைகள் வழங்க இந்தக் குழு அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்விசார் தரப்பினர் அனைவரையும் இணைத்து உருவாக்கப்படவுள்ளது.

இக்குழுவில் ,

1. அரசு பள்ளித் தலைமையாசிரியர்
2. உயர்கல்வி வழிகாட்டல் பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியர்
3. முன்னாள் மாணவர்கள்
4. பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர்
5. பள்ளி மேலாண்மைக் குழு துணைத் தலைவர்
6. பள்ளி மேலாண்மைக் குழு கல்வியாளர்
7. பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்
8. நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள்

Scanned with OKEN Scanner

ஆகியோர் இணைந்து செயல்படுவர். மாணவர்களை உயர்கல்விக்கு தயார் செய்வதும், விண்ணப்பிக்கச் செய்வதும் உயர்கல்வி வழிகாட்டல் குழுவின் தலையாயக் கடமையாகும்.

- இதனைத் தொடர்ந்து, முதற்கட்டமாக இக்குழுவில் உள்ள தலைமை ஆசிரியர், உயர்கல்வி வழிகாட்டல் பயற்சி பெற்ற முதுகலை ஆசிரியர், பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர், பள்ளி மேலாண்மைக் குழு துணைத் தலைவர், பள்ளி மேலாண்மைக் குழு கல்வியாளர், பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர் மற்றும் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களுக்கு, முதன்மைக் கருத்தாளர்கள் (DIET Faculties) மற்றும் நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்கள் வாயிலாக மாவட்ட அளவில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (**24.04.2023 முதல் 05.05.2023 வரை**)
- இப்பயிற்சியில் உயர்கல்வி வழிகாட்டல் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது.

**உயர்கல்வி வழிகாட்டல் குழு உறுப்பினர்களின் பங்குகள்:**

1. **தலைமை ஆசிரியர் மற்றும் உயர்கல்வி வழிகாட்டல் பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியரின் பங்கு:**

- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் தேர்வு முடிவுகளுக்குப் பிறகு உயர்கல்வி குறித்த ஆலோசனை அமர்வுகளை ஏற்பாடு செய்தல்.
- பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் துணைத் தலைவருடன் கலந்தாலோசித்து பள்ளி மேலாண்மைக் குழுவில் உள்ள கல்வியாளர் மற்றும் கருத்தாளர் உதவியுடன் பள்ளிகளில் **கல்லூரிக் கனவு** நிகழ்வுகள், மாணவர்களுக்கான பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் (TNSDC) இணைந்து திட்டமிடப்பட்டுள்ள கணினி மற்றும் ஆங்கிலப் பயிற்சிகளுக்கு 10,11 மற்றும் 12 வகுப்பு மாணவர்களை ஒருங்கிணைத்துத் தவறாமல் பங்கு பெறச் செய்தல்.
- நுழைவுத் தேர்வு விவரங்கள், முதன்மைக் கல்லூரிகளுக்கு (Premier Institutes) மாணவர்களை அழைத்துச் செல்லுதல் மற்றும் மாணவர்களின் திறன் வளர்ப்பு முகாம்களை நடத்துதல்.
- மாணவர்களின் உயர்கல்வி ஆர்வத்தை அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தார் போல் ஆலோசனைகள் வழங்குதல்.

Scanned with OKEN Scanner

- மாணவர்களுக்கான வாட்ஸப் குழு (Whats App) உருவாக்கி மே 6 முதல் தினசரி வழங்கப்படவுள்ள பயிற்சிகள், கல்லூரிக் கனவு குறித்த தகவல்கள், கல்லூரி சேர்க்கை விவரங்கள் குறித்த தகவல்களைப் பகிர்தல்.
- உரிய ஆலோசனை வழங்குதல், விண்ணப்ப படிவங்களை நிரப்புதல் மற்றும் உயர்கல்வியில் சேர்க்கையை உறுதி செய்தல்.
- மாணவர்களின் கல்லூரி சேர்க்கை விவரங்களை EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல்.
- இணைப்பில் வழங்கப்பட்டுள்ள உயர்கல்வி வழிகாட்டு நெறிமுறைகளை ஆழமாக புரிந்துணர்ந்து மாணவர்களுக்கு அதன்படி உயர்கல்விக்கான வழிக்காட்டிடல் வேண்டும்.

2. <u>**முன்னாள் மாணவர்களின் பங்கு:**</u>

- பள்ளி மேலாண்மை குழுவோடு இணைந்து செயலாற்றுதல்.
- பெற்றோர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டல் தொடர்பான விழிப்புணர்வு அளித்தல்.
- மாணவர்களோடு கலந்துரையாடிப் பழகுதல்.
- ஆசிரியர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி முகாம்கள் நடத்த உதவுதல்.
- மாணவர்களை வழிநடத்தி, உயர்கல்விப் படிப்புகள் மற்றும் பல்வேறு கல்லூரிகளை அறிமுகப்படுத்துதல்.
- பள்ளியிலிருந்து இடைநின்ற மாணவர்களைக் கண்டறிந்து தலைமை ஆசிரியரோடு உடனடியாக தொடர்பு கொள்ளச் செய்தல்.

3. <u>**பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர், துணைத் தலைவர், கல்வியாளர் மற்றும் தன்னார்வக் கருத்தாளரின் பங்கு:**</u>

- தலைமை ஆசிரியர் மற்றும் முன்னாள் மாணவர்களோடு இணைந்து மாணவர் இடைநிற்றல் குறித்து ஆராய்தல்.
- உயர்கல்வி குறித்த வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுதல் மற்றும் அனுபவ பகிர்வு செய்தல்.
- மாணவர்கள் உயர்கல்வி வழிகாட்டல் பெற அவரவர் பள்ளிகளுக்கு 06.05.2023 முதல் வருகை புரிய பெற்றோர்களுக்கு த் தகவல்கள் அளித்தல்.
- உயர்கல்வி வழிகாட்டல் குழு பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளதை தங்கள் பகுதியில் உள்ள மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்திப்

Scanned with OKEN Scanner

பள்ளிகளில் செயல்படும் உதவி மையங்களில் உயர் கல்வி ஆலோசனைகளைப் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளுதல்.

- மேலும், தேர்வு எழுதாத மற்றும் தேர்ச்சி பெறாத மாணவர்கள் பள்ளிகளில் நடைபெறும் சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்று ஜூன் மாதத்தில் நடைபெறும் துணைத் தேர்வை எழுதுவதற்கான விழிப்புணர்வைப் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களிடையே ஏற்படுத்துதல்.
- மாலை நேரங்களில் சுய உதவிக்குழு உறுப்பினர்களைச் சந்தித்து கல்லூரிக் கனவு திட்டம் குறித்து புரிதலை உருவாக்கி இம்முயற்சியில் அவர்களையும் இணைந்து செயல்பட அழைத்தல்.
- முன்னாள் பள்ளி மாணவர்களை நேரடியாக சந்தித்து '**கல்லூரிக் கனவு**" குறித்த அவசியத்தை ஆழமாக உணர வைத்தல்.
- குறிப்பிட்ட மேல்நிலைப்பள்ளியைச் சுற்றியுள்ள கிராமங்களில் '**கல்லூரிக் கனவு**" நிகழ்வு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- பள்ளிக்கல்வித்துறை தரும் '**கல்லூரிக் கனவு**" திட்ட வாசகங்கள் அடங்கிய தொப்பி மற்றும் T - சர்ட்களை அணிந்து கொண்டு பொது இடங்களில் பறை வாசித்து ஊர்வலமாக செல்லுதல் மற்றும் பொது மக்களிடம் இத்திட்டம் குறித்த துண்டு அறிக்கைகளை வழங்குதல்.
- தலைமை ஆசிரியர்களின் உதவியோடு அந்தந்தப் பள்ளியில் படித்த மாணவர்களின் முகவரிகளைப் பெற்று அவர்களுடைய இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று பேசுதல். பின்பு, அவர்களை அணுகியுள்ளதை உறுதி செய்வதற்கு "**கல்லூரிக்கனவு**" எனும் சுவரொட்டிகளை அவர்களது இல்லக் கதவுகளில் ஒட்டுதல்.
- மே மாத இறுதிக்குள் இந்த பிரச்சாரத்தின் விளைவாக உயர்கல்விப் பலன்களைப் பெற்ற மாணவர்களை தங்கள் அனுபவங்களை மே மாதம் இறுதியில் நடைபெறும் **கல்லூரிக் கனவு** மேடைகளில் பகிர்ந்துகொள்ளச் செய்தல்.
- ஒவ்வொரு பள்ளி மாணவரைச் சந்திக்கும் போதும் அடுத்து நீங்கள் என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம்? அதற்குத் தேவையான கல்விக் கடனுதவிகள் என்னென்ன? அதனை பெறுவதற்கான விண்ணப்பங்களை எப்படி பூர்த்தி செய்வது? போன்ற தகவல்களை உயர்கல்வி வழிகாட்டல் குழுவிற்குத் தகவல்களை பகிர்தல்.

4. **<u>நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களின் பொறுப்புகள்:</u>**

- அரசுப் பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.

Scanned with OKEN Scanner

- பள்ளிகளில் மாணவர்களுக்கான ஆலோசனை முகாமை ஒருங்கிணைத்தல்.
- விண்ணப்பங்கள் / சேர்க்கைப் படிவங்களை நிரப்புவதில் மாணவர்களுக்கு உதவி செய்தல்.
- வழிகாட்டல் வலையமைப்பின் ஊடாக இடைநின்ற மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவிகளை வழங்குதல்.
- பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல்.

<u>4.1 **நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்களின் பொறுப்புகள்:**</u>

- மாணவர்கள் கல்லூரிக் களப்பயணம் மேற்கொள்ள ஏற்பாடு செய்தல்.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு **கல்லூரிக் கனவு** குறித்தபயிற்சிகள் அளிக்கப்படுவதை உறுதி செய்தல்.
- அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உதவும் பொருட்டு நாட்டு நலப்பணித் திட்டத் தன்னார்வலர்களை வழங்குதல்.
- கல்லூரி விண்ணப்பங்கள் / சேர்க்கையை முடிக்க நாட்டு நலப்பணித் திட்டத் தன்னார்வலர்களுக்கு உதவுதல்.
- நாட்டு நலப்பணித் திட்ட மாணவர் ஈடுபாட்டை திட்டமிடுதல் மற்றும் கட்டமைத்தல்.
- மாணவர்களைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துடன் இணைப்பதன் வாயிலாக சிறப்பு முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- மாணவர்கள் உதவித்தொகை பெற உதவி செய்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டல் குழு செயல்படுத்தப்படவேண்டுமென அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டு நெறிமுறைகள்

மாநிலத் திட்ட இயக்குநர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

27.4.23
ஆணையர்
பள்ளிக் கல்வித் துறை

Scanned with OKEN Scanner

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

**நகல் (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)**

1. பேராசிரியர்கள், மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அனைத்து மாவட்டங்கள்.
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள்,
3. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

Scanned with OKEN Scanner

# உயர்கல்வி சேர்க்கை வழிகாட்டல் நெறிமுறைகள்

**1. ஒவ்வொரு பள்ளியிலும் உயர்கல்விக்கு வழிகாட்டியாக நியமிக்கப்பட்டுள்ள SPOC ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டியவை.**

**அ)** ஒவ்வொரு பள்ளியிலும் அதிகபட்சமாக 100 மாணவர்களுக்கு ஒரு SPOC நியமிக்கப்பட வேண்டும். 100 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு 2 SPOC க்கள் நியமிக்கப்பட வேண்டும். (எ.கா. 12 ம் வகுப்பில் 120 மாணவர்கள் இருக்கும் பள்ளியில் 2 SPOC க்கள் நியமிக்கப்பட வேண்டும். (2 ஆசிரியர்கள் X 60 மாணவர்கள்))

**ஆ)** கடந்தாண்டுகளில் அந்த பள்ளி மாணவர்கள் எந்தெந்த கல்லூரிகளில் பொதுவாக சேருகிறார்கள் என்பது குறித்தும், உயர்கல்வி சேருவதில் அந்த பள்ளி / பகுதி மாணவர்களுக்கு உள்ள சிக்கல்கள் குறித்தும் தன்முனைப்போடு அறிந்த கொள்ள வேண்டும்.

**இ)** தற்போது உள்ள நவீன பாடப்பிரிவுகள், எளிதில் வேலை வாய்ப்பு தரும் பாடப்பிரிவுகள் மற்றும் நுழைவு தேர்வு இல்லாமல் 12 ம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே சேர்க்கை நடைபெறும் கல்லூரிகள் போன்றவற்றை அறிந்து கொள்ள வேண்டும். (இவற்றுக்கு இணைய வழி பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன).

**ஈ)** 12 ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வருவதற்கு முன்பே SPOC க்கள் தங்களுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள மாணவர்களின் விபரங்களை கையில் வைத்து அந்த மாணவர்களை தொடர்பு கொண்டு உயர்கல்வி குறித்த மாணவர்களின் திட்டத்தை கேட்டறிந்து அவர்கள் உயர்கல்வி செல்வதற்கு மனதளவில் தயார்படுத்தும் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**உ)** அந்தந்த பள்ளி மாணவர்கள் பெரும்பாலும் சேரக்கூடிய அருகிலுள்ள அரசு / தனியார் கல்லூரிகள் / பாடத்திட்டங்கள் குறித்தும், அதற்கான கட்டண விபரங்கள் குறித்தும் SPOC க்கள் அறிந்து கொள்வது மிக அவசியம்.

**2. தேர்வு முடிவுகள் வந்த பின் செய்ய வேண்டியவை :**

**அ)** 12 ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வந்தவுடன் அன்று மாலை 4 மணிக்குள் தோல்வியடைந்த மாணவர்களை அழைத்துப்பேசி ஆலோசனைக் கூறி அவர்களை உடனடி மறுதேர்விற்கு தயார் செய்ய வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்பட்டுள்ள Spl Camp-ல் மாணவர்களை சேர்க்க வேண்டும்.

**ஆ)** மாணவர்களை மாணவர்களின் மதிப்பெண் அடிப்படையில் வரிசைக்கிரமமாக (Ranking) தரப்படுத்த வேண்டும்.

**இ)** 80 விழுக்காடுகளுக்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் பட்டியல், அவர்களின் வகுப்பு (இட ஒதுக்கீடு), மாணவர்களின் பெயர், மதிப்பெண்கள், பாடவாரி மதிப்பெண்கள் ஆகியவற்றினை இணைப்பு 1A-ல் உள்ள பட்டியலில் பூர்த்தி செய்ய வேண்டும்.

மொத்த மதிப்பெண்களில் 80 சதவீகிதத்துக்கு குறைவாகவும், ஆனால், ஏதேனும் ஒரு பாடத்திலோ அல்லது பாடங்களிலோ 90 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருக்கும் மாணவர்களையும் இப்பட்டியலில் சேர்த்து கொள்ள வேண்டும்.

Scanned with OKEN Scanner

80 விழுக்காட்டிற்கு மேல் எடுத்த மாணவர்கள் ஒவ்வொரு பிரிவு வாரியாக பட்டியல் தயாரிக்க வேண்டும். எ.கா. 1. ST (Tribe), 2. SC (A), 3.SC, 4. BCM, 5. MBC / DNC, BC.

**ஈ)** 60 முதல் 80 விழுக்காடு வரை மதிப்பெண் பெற்ற மாணவர்களின் பட்டியல், அவர்களின் வகுப்பு (இட ஒதுக்கீடு), மாணவர்களின் பெயர், மதிப்பெண்கள், பாடவாரி மதிப்பெண்கள் ஆகியவற்றினை இணைப்பு-1B-ல் உள்ள பட்டியலில் பூர்த்தி செய்ய வேண்டும்.

60 விழுக்காட்டிற்கு கீழ் எடுத்த மாணவர்கள் ஒவ்வொரு பிரிவு வாரியாக 1C-ல் உள்ள பட்டியலில் பூர்த்தி செய்ய வேண்டும். எ.கா. 1. ST (Tribe), 2. SC (A), 3.SC, 4. BCM, 5. MBC / DNC, BC.

**உ) கடந்த ஆண்டின் Cut Off க்கு அந்த பிரிவில் அரசு கல்லூரிகள் / அரசு உதவி பெறும் கல்லூரிகள், தனியார் கல்லூரிகளில் அரசு இடங்களை பெற்றவர்களின் Cut Off யை விட தற்போது (10 மதிப்பெண்களுக்கு குறைவாக உள்ள மாணவர் வரை) கட்டாயம் தொழிற்கல்விக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் விண்ணப்பம் செய்வதை SPOC உறுதி செய்ய வேண்டும்.**

**ஊ)** மேற்சொன்ன 1A, 1B, 1C பட்டியலில் மாணவிகளை வெள்ளை கட்டமாகவும், மாணவர்களை கருப்பு கட்டமாகவும் வேறுபடுத்தி காண்பிக்க வேண்டும்.

**எ)** தேர்வு முடிவுகள் வந்த மறுநாள் மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து எந்தெந்த கல்லூரிகளிலெல்லாம், அவர்களுக்கு சேர வாய்ப்பு இருக்கிறது என்பதையும், கடந்த ஆண்டு 7.5 விழுக்காடு தொழிற்கல்வி பாடத்திட்டத்தின் இட ஒதுக்கீடு மற்றும் அதன் Cut Off குறித்தும், அரசின் கல்வி உதவித்தொகை, புதுமைப்பெண் திட்டம், குறித்தும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கு எடுத்து சொல்ல வேண்டும்.

**ஏ)** உடனடியாக ஒவ்வொரு மாணவரும் 7.5 சதவீகித இடஒதுக்கீட்டின் கீழ் பல்வேறு தொழிற்கல்விகளில் அரசு ஒதுக்கீட்டில் அரசு கல்லூரி இடங்களிலோ அல்லது அரசு ஒதுக்கீட்டு இடங்களில் தனியார் கல்லூரிகளிளோ பெற வாய்ப்புள்ள மாணவர்களை (கடந்தாண்டு அப்பிரிவில் கடைசி மாணவர் பெற்ற Cut Off க்கு (10 மதிப்பெண்களுக்கு குறைவாக உள்ள மாணவர் வரை) கட்டாயம் விண்ணப்பிக்க செய்ய வேண்டும். இதற்கு அந்தந்த பள்ளிகளில் சிறப்பு ஏற்பாடுகளை தலைமையாசிரிகள் மேற்கொள்ள வேண்டும்.

**ஒ)** தொழிற்கல்வியில் சேருவதற்கு விருப்பமில்லா மாணவ/ மாணவிகளை அதிகமாக மதிப்பெண்கள் பெற்றியிருப்பவர்களை அந்தந்த பாடப்பிரிவுகளில் சிறப்பு வாய்ந்த கல்லூரிகளுக்கு விண்ணப்பபிக்க செய்வது மிக அவசியம். எ.கா.

